II ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT,

THIRUVALLUR AT POONAMALLEE

**O.S.No. 28/2023**

Deposition of witness for the Plaintiff/PW3
solemnly by Thiru.A.Manikandan, Junior Assistant
in accordance with the provision of Act I for 1873 on 06/08/2025

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | Vijayprabu | Age | : | |
| Father's / Husband's Name | : | | Village | : | |
| Taluk | : | | Distict | : | |

<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை=</u>

ரூ.10 லட்சத்தை சரவணன் தான் கொடுத்தார். ஒட்டல் தைறவேவிற்கு எதிரில் இருக்கும் பாபு சார் அலுவலகத்தில் வைத்து கொடுத்தார். அப்போது உடன் 4, 5 பேர் இருந்தனர். பாபு, சரவணன், பழனி, கனகராஜ் மற்றும் ஒருவர் உடன் இருந்தனர். வாடகை ஒப்பந்தத்தை ரத்து செய்வதற்காக பணம் கொடுப்பதாக சொன்னார்கள். பணம் கொடுக்கும் போது நான் இருந்தேன். பணம் கொடுத்தற்ககு ரசீது ஏதேனும் கொடுக்கப்பட்டதா என்றால் நான் இருக்கும் போது கொடுக்கவில்லை. இந்த சம்பவம் 2017ம் ஆண்டு நடந்தது. சரவணன் பிளாட்டுகள் போட்டு விற்கும் தொழில் செய்து வந்தார். நான் பிளாட்டு வாங்குதற்காக போன வகையில் அவரை பழக்கம். நான் சொல்வது போல் ஒரு சம்பவமே நடக்கவில்லை என்றும் சரவணன் எனக்கு வேண்டியவர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.